<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C.C.115/2023**

**Prosecution witness : அ.சா.34** **Date : 06.01.2025.**

| | |
|---|---|
| **Name : கண்ணன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்போது சத்தியமங்கலம் மோட்டார் வாகன அலுவலத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை.1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.09.2016 அன்று மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியில் இருந்தபோது மேச்சேரி காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்படி TN 52 U 8462 என்ற இலகுரக வாகனத்தை (சரக்கு வாகனம் அனுமதி சீட்டு இல்லாதது) அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தபோது கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது

1) முன் புற காற்று தடுப்பு கண்ணாடி உடைந்து காணப்பட்டது.

2. முன்புற பானட் ஒடுங்கி காணப்பட்டது.

3. முன் வலது புற முகப்பு விளக்கு உடைந்து காணப்பட்டது.

4. முன் வலது புற பானட்டில் சிராய்ப்புகள் காணப்பட்டது.

5. இடது புற பாடி முழுவதும் சிராய்ப்புகள் காணப்பட்டது.

6. இடது புற சரக்கு ஏற்றும் பாடி வளைந்து காணப்பட்டது.

இவ்வாகனத்தின் சக்கரம் மற்றும் ஸ்டிரிங்கின் நிலை திருப்திகரமாக இருந்தது. இந்த வாகனம் இயக்கி ஆய்வு செய்யும் நிலையில் இல்லை. இறுதியாக எனது ஆய்வின் முடிவில் இந்த விபத்து இவ்வாகனத்தின் இயந்திரகோளாறினால்

ஏற்படவில்லை என சான்று வழங்கினேன். **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. பிரேக்கின் நிலை குறித்து சொல்லப்படும் நிலையில் அதன் விவரம் சொல்லமுடியுமா என்றால் வாகனம் இயங்கி ஆய்வு செய்யும் நிலையில் இல்லை. எப்.சி செய்த விவரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த தேதி என்றால் 09.07.2017 ம் தேதி ஆகும். விபத்து எந்த தேதியன்று நடந்தது என்றால் 05.09.2016 ஆகும். தகுதி சான்று எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் என்றால் ஒரு முறை வழங்கப்படும்.

3. விபத்து நடக்கும்போது காலவாதி ஆகிவிட்டது என்றால் இல்லை. விபத்து நடக்கும் வரை வாகனம் இயங்கும் நிலையில் தான் இருக்கும் என்றால் ஆமாம். பிரேக்கின் நிலை இயக்க முடியாத நிலையில் விபத்து எப்படி நடந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் விபத்து நடந்தது என்று நினைவில்லை. விபத்தின் காரணமாக பிரேக் பழுதடைந்தது என்று சொல்லமுடியுமா என்றால் என்னிடம் ஆய்வுக் உட்படுத்தபட்டபோது அவ் வாகனத்தின் நிலை திருப்திகரமாக இருந்தது.

4. விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் தற்போது நினைவில்லை. என்னிடம் வாகனத்தை ஆய்வு கொண்டு வந்த தேதி 20.09.2016 என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு சுமாராக 15 நாட்கள் கழித்துதான் என்னிடம் ஆய்வுக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். பிரேக் போன நிலையில் ஸ்டிரீங் மற்றும் சக்கரம் நிலை சரியான நிலையில் இருந்தது என்றால் பிரேக் போனதால் தான் இந்த விபத்து ஏற்பட்டதாக எனது ஆய்வில் இல்லை என்றால் ஆமாம்.

5. எதனால் விபத்து நடந்தது என்று சொல்லமுடியுமா என்றால் என்னால் கூறமுடியாது. விபத்தின் காரணமாக சேதம் ஏற்பட்டது என்றால் அவ்வாறு சொல்ல முடியாது.

மறுவிசாரணை இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.